செய்தி வெளியீடு எண்: 578 நாள் : 21.10.2013

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

இன்று (21.10.2013) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மொரீசியசு நாட்டின் மேனாள் கல்வியமைச்சர் பேரா. முனைவர் ஆறுமுகம் பரசுராமன் அவர்கள் கலந்து கொண்ட பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், அரசு செயலாளர் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட இருக்கும் திருக்குறள் காட்சிக் கூடம் பற்றியும், சீனம் மற்றும் அரபு உலக மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்படுவது பற்றியும் எடுத்துக் கூறினார். மேலும், முன் எப்போதும் இல்லாத அளவில் தமிழ் வளர்ச்சித் திட்டங்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு அவை இக்காலத்திலேயே நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதையும் எடுத்துக் கூறினார்.

மொரீசியசு நாட்டின் மேனாள் கல்வியமைச்சர் பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமன் அவர்கள் சிறப்புரை ஆற்றினார். அவர் தனது உரையில், மொரிசீயசு நாட்டின் அமைச்சராக இருந்த 1983 முதல் 1995 வரையிலான காலத்தில் மொரீசியசு நாட்டில் தமிழ் வளர்ச்சிக்கென்றும், தமிழர்களுக்கென்றும் தாம் ஆற்றிய பல்வேறு பணிகளைப் பற்றி எடுத்துக் கூறினார்.

1995இல் தஞ்சையில் நடந்த எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்டதாகவும். அம்மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களோடு உரையாடிய அனுபவத்தையும் பகிர்ந்து கொண்டார். அம் மாநாடு உலகத் தமிழர்களை

ஒன்றிணைக்கும் முகாமாகவும், தமிழ் மொழியை உலக அளவில் உயர்த்துவதாகவும் அமைந்தது என்றார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் அரும்பணிகள் உலகம் அறிந்த ஒன்று. குறிப்பாக, அயல்நாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்களுக்காக அவர் ஆற்றி வரும் பணி அளப்பரியது. தமிழர் பண்பாடு, கலை ஆகியவற்றை ஆவணப்படுத்துவதற்காக 12ஆவது ஐந்தாண்டு திட்டத்தில் வெளியிடப்பெற்ற அறிவிப்பினையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கென்று திருக்குறள் காட்சிக் கூடம், அயல்நாட்டுத் தமிழர் பண்பாட்டு மையம் மற்றும் தொல்காப்பியர் ஆய்வு இருக்கை ஆகியவற்றை அமைப்பதற்கான மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நடவடிக்கைகள் குறித்தும் வியந்து பாராட்டினார். கடந்த இரண்டாண்டு காலத்தில் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சிப் பணிகளை உலகத் தமிழர்கள் வியந்து பாராட்டுகிறார்கள் எனவும் தெரிவித்தார்.

திருக்குறள் மொரீசியசு நாட்டின் மொழியான கிரியோல் மொழியிலும், பிரெஞ்சு மொழியிலும் மொழிபெயர்க்கப்பெற்றுள்ளதையும் எடுத்துரைத்தார். திருக்குறள் உலகப் பொதுமறை என்பதால் உலகம் முழுவதிலும் திருக்குறள் பெருமையை உணரும் வகையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமைக்கப்பெறும் திருக்குறள் ஓவியக் காட்சிக்கூடத்தை இணையதளம் வழியாகவும் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்னும் கருத்தினைப் பதிவு செய்தார். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தால் நடத்தப்பெற்று வரும் சுவடி வகுப்பினைத் தொடர்ந்து சுவடிகள் கண்காட்சி ஒன்று பாரீசு மாநகரில் ‘யுனெஸ்கோ’ நிறுவனத்துடன் இணைந்து நடத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள விருப்பம் தெரிவித்தார்.

மேலும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நடத்தப்பெற்று வரும் தாய்மொழி திருநாள் கொண்டாட்டத்தினையும், உலக மொழிபெயர்ப்பு நாள் ஆகியவனற்றைக் குறிப்பிட்டும் பாராட்டுத் தெரிவித்தார்.

நிறைவாக, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் பேரா. முனைவர் கோ. விசயராகவன் அவர்கள் நன்றியுரையில், தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சிப் பணிகளை விரைவாகவம், நுண்ணறிவோடும் செயல்படுத்த ஆற்றுப்படுத்தி வரும் அரசுச் செயலாளர் அவர்களுக்கும், உலகத் தமிழ் ஆய்வுகளை ஒன்றிணைக்க ஏற்படுத்தப்பட்டுள்ள உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு வருகை புரிந்த மொரீசியசு நாட்டின் மேனாள் கல்வியமைச்சர் பேராசிரியர் ஆறுமுகம் பரசுராமன் அவர்களுக்கும், தமிழ் மொழி மற்றும் தமிழர்களின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும் தமது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தார். பின் இக்கலந்துரையாடல் இனிதே நிறைவடைந்தது.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9